IJCRT.ORG ISSN : 2320-2882

INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS (IJCRT)

An International Open Access, Peer-reviewed, Refereed Journal

# மேலாண்மை பொன்னுச்சாமி சிறுகதைகளில் உத்திகள்

நெறியாளர்

**முனைவர் கோ. பிலவேந்திரன்**

பேராசிரியர் மற்றும் தலைவர்

தமிழியல்துறை

அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

ஆய்வாளர்

**ச. ராஜ்**

முனைவர் பட்ட ஆய்வாளர்

தமிழியல்துறை

அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

**ஆய்வுச்சுருக்கம்**

கதைக்கருவிற்கு அழுத்தம் தரும் பொருட்டு இத்துணைக் கதைகள் கதைக்குள் கதை இணைக்கப்பட்டுள்ளன என்பதை, முன்னிருத்தி மேலாண்மை பொன்னச்சாமி சிறுகதைகளில் ஆய்வுசெய்கின்ற போது கதைகளுக்குள் இனங்காட்டும் கதை இருக்கின்ற பொருட்டு கதை உத்தி முதன்மையாகிறது என்பதை ஆய்வுச் சுருக்கமாகக் கொண்டு இவ்வாய்வு அமைகிறது.

**முன்னுரை**

மேலாண்மை பொன்னுச்சாமி கதைகளில் அமைந்துள்ள கருக்கள் பற்றியும், ஆசிரியரின் சிந்தனையில் குடிகொண்டுள்ள கருவை சிறுகதையாக வளர்க்கப் பல உத்திகள் கையாளப்படுகின்றன. அவ்வுத்திகளின் வளர்ச்சி நிலையை வாழ்வியல் மையங்களை வெளிப்படுத்தும் முகமாக சிறுகதையின் உத்தி முறையை ஆராயும் முகமாக இவ்வாய்வுக்கட்டுரை அமைந்துள்ளது.

**கரு**

சிறுவிதையிலிருந்து மரம் உருவாவது போலக் கருவிலிருந்தே சிறுகதை உருவாகிறது. கதையில் கரு என்பது உடலில் உயிர் போன்றது கரும்பிலிருந்து பிழிந்தெடுக்கப்பட்ட சாறு போன்றது. கருவே கதையின் இதயமாகும். இக்கரு ஒரு நிகழ்ச்சியாகவோ கருத்தாகவோ அமையலாம் என்பதை,

> "சிறுகதை ஒரு கருத்தை அல்லது கருவை மையமாகக் கொண்டு அமைந்திருக்க வேண்டும்."[1]

> "அறியும் சூழலிலிருந்தும் அறிய வாய்ப்புப் பெறாத வாழ்வியல் உண்மைகளை இலக்கியத்தில் உணர்கிறோம். அப்படிக் கலைஞன் நமக்குக் காட்டுகின்ற உண்மையின் சாரம்தான் கருப்பொருள்."[2]

> "எந்த ஒரு நிகழ்ச்சியின் மேல் அல்லது கருத்து விளிம்பின் மேல் சிறுகதை பின்னப்பட்டுள்ளதோ அந்த நிகழ்ச்சி அல்லது கருத்து சிறுகதையின் கரு"[3]

என்று கூறுவார். மேலும்,

> "சமகாலச் சமுதாயச் சிக்கல்களே பெரும்பான்மையான சிறுகதையில் கதைப் பொருளாக இருந்து வந்திருக்கின்றன."[4]

கருவானது ஆசிரியரின் அகத்திலிருந்தோ வாழ்க்கைச் சூழலாகிய புறத்திலிருந்தோ பெறப்படுகிறது. எனவே சிறுகதைகள் எல்லாம் மக்களின் அன்றாட வாழ்க்கையை ஒட்டியதாகவே அமைகின்றன. மேலாண்மை பொன்னுச்சாமி தம் வாழ்க்கையில் கண்ட மாந்தர்களையும் அனுபவித்த வாழ்க்கை நிகழ்ச்சிகளையும் சமுதாயச் சிக்கல்களையும் கருக்களாகக் கொண்டு கதைகளைப் படைத்துள்ளார். எனவே அவை நடப்பியலை விவரிப்பனவாகக் காணப்படுகின்றன.

> "இவருடைய கதை நிகழும் களம் யாவும் கரிசல் பகுதிதான். இவருடைய கதைமாந்தர்கள், நாள் முழுவதும் பாடுபட்டு, உழைத்து அரைக்கால் வயிற்றுக்கு உணவு தேடிட அத்தனைப் பேரும் கடும் உழைப்பை நல்கும் கந்தகபூமி உழைப்பாளர்கள்"[5]

என்கிறார்.

மலர்களை வண்ணங்களின் அடிப்படையில் வகைப்படுத்துவது போல் சிறுகதைகளையும் கருக்களின் அடிப்படையில் வகைப்படுத்தலாம். தனிமனிதன், சமுதாயம், பொருளியல், அரசியல், எழுத்துத்துறை ஆகிய அடிப்படைகளில் மேலாண்மை பொன்னுச்சாமியின் சிறுகதைகளில் கருக்கள் இடம்பெற்றுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

**இனம் சுட்டல்**

ஒருவனது ஆளுமையே அவனை இனம் சுட்டுகிறது. ஆளுமை என்பது ஒருவனின் உடல் தோற்றத்தை மட்டும் குறிப்பதன்று; பண்புகளையும் உள்ளடக்கியது. ஒவ்வொரு மனிதனிடமும் சில பண்புகள் உள்ளத்தே புதைந்து கிடக்கின்றன. அவை நற்பண்புகளாகவோ தீய பண்புகளாகவோ இருக்கலாம். அவனது பண்புகள் வெளிப்படும்போது அவனைச் சமுதாயம் அடையாளம் காண்கிறது.

'வளத்தையா' கதையில் தனி மனிதனை இனம் சுட்டுதல் கருவாக உள்ளது. சங்கரனும் வீரம்மாவும் இருவேறு சாதியினர். இருவரும் காதலர். கலப்பு மணத்தை ஏற்றுக் கொள்ளாத ஊர்நாட்டாண்மை வீரம்மாவைக் கற்பழிக்கிறான். வலிந்து கெடுக்கப்பட்டவளும் கற்புள்ளவளே என்ற வளத்தையாவின் போதனையை ஏற்ற சங்கரன் வீரம்மாவைத் திருமணம் செய்து கொள்கிறான்.

இக்கதையில் வளத்தையா என்ற முதியவரின் முற்போக்குச் சிந்தனை சுட்டிக்காட்டப்படுகிறது. மேலும், அவரது தனிப்பண்பாகிய கதை சொல்லுதல் இக்கதைக் கருவை வளர்த்துச் செல்கிறது. அவர் கூறுகிற ஈனாப்பூச்சி, விலைமாதும் சந்நியாசியும் என்ற நாட்டுப்புறக் கதைகளும், சங்கரன் கூறுகிற திரைப்படக் காட்சியும் கதை நிகழ்விற்கு உத்திகளாக இதில் இடம்பெற்றுள்ளன.

**பண்பு**

மனிதன் தன் வாழ்வில் பல சிக்கல்களைச் சந்திக்கிறான். அவற்றிலிருந்து விடுபடவும் மீண்டும் அச்சிக்கல்கள் ஏற்படாதிருக்கவும் பல முயற்சிகளை மேற்கொள்கிறான். அவ்வேளையில் அவனுடைய பண்புகள் சமுதாயத்திற்கு வெளிப்படும் வண்ணமாக திகழ்கின்றன என்பதை,

> "மனித வாழ்க்கை சிக்கல் நிறைந்தது. அது போன்றே மனிதர்களின் பண்பு நலன்களும் அமைகின்றன"[6]

சிக்கல்களின் அடிப்படையில் மனிதப் பண்புகள் அமைவதால் அவற்றினை விளக்குவதற்காகவே எழுத்தாளர்கள் மனிதப் பண்புகளைத் தம் கதைகளுக்குக் கருவாகக் கொள்கின்றனர். இவ்வகையில் மேலாண்மை பொன்னுச்சாமி இரக்க உணர்ச்சி, இரத்தப் பாசம், தாய்ப் பாசம், மனிதநேயம், நேர்மை, நாணயம், தன் மதிப்பு, உட்பகை, குற்ற உணர்வு, மனித ஆற்றலின் மேன்மை ஆகிய பண்புகளைத் தம் கதைகளுக்கு உத்தியாக கொண்டுள்ளார்.

**இரக்கம்**

பரிதாபத்தின் அடிப்படையிலும் கருணையடிப்படையிலும் இரக்க உணர்ச்சி தோன்றுகிறது.

இரக்க நிலையைக் கருவாகக் கொண்டது 'ஈரம்' என்ற கதை. பூவனம் ஒரு விதவை. அவளது மகள் ராதி; மகன் முத்து. பூவனம் வயல்வேலையை முடித்துவிட்டு, மாலை வீடு திரும்பும்போது காரச்சேவு வாங்கி வருகிறாள். பூந்தி தின்று கொண்டிருந்த பக்கத்து வீட்டுச் சிறுவன் ராமசாமியைப் பார்த்துக் கொண்டு நின்ற முத்துவை, ராமசாமியின் தாய் விரட்டிவிட்டதை முத்து கூறுகிறான். முத்துவின் தாய் மறுநாள் அவனுக்குப் பூந்தி வாங்கிக் கொடுத்துவிட்டு, ராமசாமிக்கும் அவன் தாய் மூலமே பூந்தி கொடுக்கிறாள்.

பண்டிகைக் கொண்டாட்டம் பின்னோக்கு உத்தியாகக் கையாளப்பட்டுள்ளது. இருவேறு தாய்மாரின் செயல்கள் வழக்காற்று முறையில் இணைக்கப்பட்டுள்ளதை படைப்பாசிரியர் தம் படைப்புகளின் வாயிலாக அறிமுகம் செய்கிறார்.

**இரத்தப் பாசம்**

ஒருவனைப் பகைமையை மறந்து உறவாடத் தூண்டும் தன்மையுடையது இரத்தப் பாசம் ஆகும். இரத்தப் பாசத்தைக் கருவாகக் கொண்டு 'மானுடப் பிரவாகம்' என்ற கதை உருவாக்கப்பட்டுள்ளது. சாமிநாதனின் தங்கை ராசாத்தி. அவள் கணவன் மூக்கையா. சாமிநாதன் வறுமையினால் வரப்பு ஓரத்திலுள்ள வேலிமரம் ஒன்றை விற்கிறான். இதனால். இரு குடும்பத்திற்கிடையே பகை உண்டாகிறது. தன் தங்கை மகன் பாண்டி இறந்த செய்தியை அவன் கேள்விப்படுகிறான். இரத்தப் பாசம் பொங்குகிறது. தங்கை வீட்டிற்குச் செல்கிறான். தனது தங்கையும் மைத்துனனும் தன் கைகளிலும் தோள்களிலுமாகச் சாய்ந்து அழும்போது, அவனும் இரத்தப் பாசத்தால் கதறியழுகிறான் என்கிறது மானுடப்பிரவாகக் கதை.

**தாயின் பற்று**

விலை கொடுத்து வாங்க முடியாதவள் தாய். அவள் தன் குழந்தைகள் மேல் வைக்கும் அன்பே தாய்ப் பாசம். இப்பாசம் சில வேளைகளில் தன் பிள்ளைகளுக்காகக் கணவனையே எதிர்க்கும் மனப்பக்குவத்தைத் தாய்க்குத் தந்து விடுகிறது. தான் பாதிக்கப்பட்டாலும் தன் பிள்ளைகள் நன்கு வாழவேண்டும் என்ற உணர்வு தாய்ப் பாசத்தாலே உண்டாகிறது. பிள்ளைகளையே தங்கள் உலகமாகக் கொண்டு தாய் வாழ்கிறாள். இதற்குக் காரணம் தாய்ப் பாசமே.

தாய்ப் பாசத்தைக் கருவாகக் கொண்டு 'தாளமுடியாத மன்னிப்பு' என்ற கதையை படைப்பாசிரியரால் எழுதப்பட்டுள்ளன.

சுப்புத்தாய் வயலில் வேலை செய்பவள். அவள் மகள் சுந்தரி. சுந்தரி பள்ளிக்கு அபராதம் கட்ட ஐம்பது காசுகள் தாயிடம் கேட்டுப் பிடிவாதம் செய்கிறாள். மகளை அடித்து விட்டுச் சுப்புத்தாய் வேலைக்குச் சென்றுவிடுகிறாள். மகளை அடித்த குற்ற உணர்வு அவள் மனத்தில் ஓடிக்கொண்டு இருக்கிறது. மாலை வீடு திரும்புகிறாள். மகள் வீட்டு வேலைகளை முடித்து வைத்திருக்கிறாள். தவறு செய்யாத மகளைத் தண்டித்த தாய்மனம், மகளிடம் மன்னிப்புக் கேட்க முடியாமல் திணறுகிறது. மகளை மடியில் போட்டுப் பாசத்தைப் பொழிகிறாள். இது 'தாள முடியாத மன்னிப்பு' என்னும் கதை.

**மனிதநேயம்**

பதிலுதவி எதிர்பாராது ஒருவர் மற்றொருவருக்குக் காட்டும் அன்பும் கருணையுமே மனிதநேயமாகும். ஒருவருக்கொருவர் உதவும்போது மனிதநேயம் வலுவடைகிறது.

> "மனிதாபிமானம் என்பது நாடு, மொழி, இனம், மதம் முதலியவற்றைக் கடந்த உள்ளுணர்வாகும்."[7]

சண்முகம் தன் மனைவி பார்வதியை ராசபாளையம் மருத்துவமனைக்குப் பிரசவத்திற்காகப் பேருந்தில் அழைத்துச் செல்ல ஆயத்தமாகிறான். பேருந்து தாமதமாக வருகிறது. ஓட்டுநரும் நடத்துநரும் டீக்குடிக்கச் சென்றுவிடுவதால், பேருந்து புறப்படுவதில் மேலும் காலதாமதம் ஏற்படுகிறது. எனவே சண்முகம் நடத்துநரிடம் சண்டையிடுகிறான். பார்வதிக்குப் பேருந்தில் மகப்பேற்று வலி ஏற்படுகிறது. நிர்வாகத்திடமிருந்து தனக்குக் கிடைக்கப்போகிற தண்டனையையும் கருத்தில் கொள்ளாமல், பேருந்தின் வழியை மாற்றி, ஓட்டுநர் பார்வதியை அரசு மருத்துவமனையில்

கொண்டு சேர்க்கின்றார். சண்முகம் தன்னிடம் சண்டையிட்டதையும் அவர் பொருட்படுத்தவில்லை. இது ‘உள் மனிதன்’ கதையாகும்.

மனித நேயமே பகையை மறந்து பார்வதியை மருத்துவமனையில் சேர்க்க நடத்துநரை ஏவுகிறது.

பேருந்து பிந்தி வருதல், பேருந்தில் உட்கார இடம்பிடிக்கும் மக்களின் நிலை, நடத்துநருக்கும் பயணிகளுக்கும் இடையே வாக்குவாதங்கள் இவைகளெல்லாம் நடப்பியல் நிகழ்ச்சிகளாகச் சேர்க்கப்பட்டு இக்கதை வளர்க்கப்பட்டிருக்கிறது.

**நேர்மை**

மிகச் சிறந்த பண்புகளில் ஒன்று நேர்மை. மனநிறைவுடையவன் நேர்மையோடு செயல்பட விரும்புகின்றான். நீதி போதனைகள் மனத்தில் பதிந்துவிடும் போது நேர்மையாக வாழ மனம் விரும்புகிறது.

நேர்மையினைக் கருவாகக் கொண்ட கதைகள் ‘ரௌத்ரம்’, ‘கடிவாளம்’, ‘தளை’ என்பனவாகும்.

ஊர் நாட்டாண்மை சின்னாண்டி என்பவனைச் சோதிடரான முத்துச்சாமி வேளாளரின் இழவுச் செய்தியை ஆமர்நாட்டில் உள்ள உறவினர்களிடம் சொல்ல அனுப்புகின்றார். ஆனால் அவன் காசு அதிகம் கிடைக்கும் என்பதால் ஊரிலுள்ள அனைவரிடமும் கூறுகிறான். ஆமர்நாட்டார் கொடுத்த பணத்தால், தன் மனைவி முத்தக்காவுக்குத் துணி வாங்கிக் கொடுக்க விரும்புகிறான். அவளோ நேர்மையற்ற வழியில் வந்த பணத்தால் துணி வாங்கி உடுத்துவதைவிட நிர்வாணமாய் இருப்பதே மேல் என்று கூறி மறுக்கிறாள். மானத்தை விட நேர்மையே சிறப்பானது என்பதனை முத்தக்கா தன் கணவனுக்கு உணர்த்துகிறாள். இதுவே ‘ரௌத்ரம்’ என்ற கதையாகும்.

இழவுச் செய்தி கூறச் சென்றபோது சின்னாண்டி நடந்து கொள்ளும் விதம் கதை வளரத் துணை செய்கிறது. அவன் முத்தக்காவுடன் இரவு நேரம் உறவு கொள்ள முயன்ற நிகழ்ச்சி ஒன்று பின்னோக்கு உத்தியாகச் சேர்க்கப்பட்டிருக்கிறது.

புன்செய் வேலைகள், சோதிடம் சொல்லுதல், ஜவுளி வியாபாரம், இழவுச் செய்தி கூறல் போன்ற பல்வேறு தொழில்களை விவரிப்பதும் இக்கதை வளர்ச்சியில் பங்குபெறுகிறது.

பயணி ஒருவர் பேருந்து இருக்கையில் தவறவிட்டுப் போன 5 பவுன் நகையினை நடத்துநர் மாடசாமி தனக்கென எடுத்துக் கொள்ளாது, மேலாளரிடம் ஒப்படைக்கிறார். பின்னர் அது உரியவரிடம் கொடுக்கப்படுகிறது என்பது ‘கடிவாளம்’ சிறுகதையில் குறிப்பிடுவார் ஆசிரியர்.

> “பணம் ஆற்றல் மிக்கது என்பது உண்மைதான். ஆனால் அந்த ஆற்றலுக்கும் அப்பாற்பட்ட ஒன்று இருக்கிறது. அதுதான் மனநிறைவு.”[8]

நடத்துநர் மாடசாமி 5 பவுன் நகையைத் தனக்கு வைத்துக்கொள்ள எண்ணும் போது, அவனுக்கு மனப்போராட்டம் ஏற்படுகிறது. அதனைப் பொருட்படுத்தாது அதை விற்று ஆற்றல்மிக்க பணமாக ஆக்கியிருப்பானானால் அமைதியை அவன் இழந்திருப்பான். அந்நகையானது. உரியவரிடம் போய்ச் சேர்ந்தது அவனுக்கு மனநிறைவைக் கொடுக்கிறது. அவன் தொழில் நேர்மையும் பாராட்டப்படுகிறது. இக்கதை நடத்துநரின் நேர்மையை உணர்த்துவதாக உள்ளது.

பேருந்தில் பயணச் சீட்டு வழங்கும் நிகழ்ச்சி, 5 பவுன் தங்கச் சங்கிலி கையில் கிடைத்ததால் மாடசாமிக்கு ஏற்படுகிற மனப் போராட்டங்கள் ஆகியன வரிசையாக அமைக்கப்பட்டுக் கதை வளர்க்கப்பட்டிருக்கிறது.

**நாணயம்**

சொன்ன சொல் தவறாது நடத்தல் நாணயமாகும். இப்பண்புள்ளவர்கள் உலகினரால் போற்றப்படுகின்றனர்: மக்களிடையே நற்பேறும் பெறுகின்றனர். நாணயம் என்ற கரு ‘நிறம் மாறும் நிஜங்கள்’, ‘நாணயன்’ ஆகிய இருகதைகளில் காணப்படுகின்றது.

விவசாயி ஒருவன் பால் விற்ற பணத்தில் கடனைத் திருப்பித் தருவதாக உண்மையைச் சொல்லி உரம் கடனாகக் கேட்கும் போது தராத உரக்கடைக்காரர், மறுநாள் தருவதாகப் பொய் கூறியதும், உரத்தைக் கடனுக்குக் கொடுக்கிறார். நாணயம் தவறாத விவசாயி சூழ்நிலையினால் நாணயம் தவறுகிறான் என்கிறது ‘நிறம் மாறும் நிஜங்கள்’ என்ற கதை. வாணிக நுணுக்கங்கள் இணைக்கப்பட்டுக் கதை வளர்க்கப்பட்டுள்ளது.

> “வாழ்க்கை நெருக்கடிகள் மனிதனின் தனித் தன்மைகளை இழக்கச் செய்கின்றன.”[9]

நாணயம் தவறாது நடக்க வேண்டும் என்பதற்காகவே உண்மைநிலை கூறி உரம் கடன் கேட்கிறான் விவசாயி. ஆனால் உரக்கடைக்காரர் கடன் தர மறுக்கிறார். உரம் இடவில்லையெனின் பயிர்கள் பாழாகி விடும். கையிலும் பணமில்லை. இத்தகைய வாழ்க்கை நெருக்கடியில் அவன் மறுநாள் பணம்

தருவதாகப் பொய் கூறி உரத்தைக் கடனாகப் பெற்றுச் செல்கிறான். நாணயமாக வாழவேண்டும் என்பது அவனது குறிக்கோள். ஆனால் வாழ்க்கை நெருக்கடி அவனது தனித்தன்மையான நாணயத்தை இழக்கச் செய்துவிடுகிறது.

ஜவுளிக்கடைக்காரர் ராமச்சந்திரனுக்குச் சொன்ன நாளில் பணத்தைக் கொடுத்திட, மனைவியின் கம்மலைச் சின்னச்சாமி அடகு வைக்கிறான். அப்பணம் மாமனார் ஈமச் சடங்கில் செலவாகிவிடுகிறது. வெள்ளாட்டை விற்கிறான். அது மகனின் திடீர் மருத்துவத்திற்குச் செலவாகிறது. சைக்கிளை விற்க ரூ. 25 முன்பணம் வாங்குகிறான். மறுநாள் மீதித் தொகையைப் பெற்றுக் கடனைக் தீர்க்க முடிவு செய்கிறான். அதற்குள் ஜவுளிக்கடைக்காரர் ஊரார் மத்தியில் சின்னச்சாமியை அவமானப்படுத்திவிடுகிறார். கடனைத் தீர்க்க எடுத்த அனைத்து உண்மையான முயற்சிகளும் பொய்யாகி விடுகின்றன. இது 'நாணயன்' கதை.

> "ஒரு குறிப்பிட்ட நிகழ்ச்சியோ அல்லது நோயுள்ள சூழ்நிலையோ ஒருவனுடைய குணவியல்பைக் கெடுத்து விடக்கூடும்."[10]

இக்கதையில் சின்னச்சாமியின் மாமனாருக்கு நடத்தும் ஈமச்சடங்கு நிகழ்ச்சி, மகனின் நோய் ஆகிய இரண்டும் அவனது நாணயத்தின் இழப்பிற்குக் காரணமாகின்றன.

சூளைக்காரனின் இறப்பு, சின்னச்சாமி - ராமச்சந்திரன் ஆகியோரின் வாக்குவாதம் ஆகியன வரிசையாக இணைக்கப்பட்டுக் கதை வளர்க்கப்பட்டுள்ளது.

**முடிவுரை**

மேலாண்மை பொன்னுச்சாமி நாடறிந்த எழுத்தாளர்களுள் ஒருவராவார். அவரது கதைகளில் எழுத்தாளர்களின் கதைக் கருத் தேர்வும் அவர்களின் பண்புநலன்களும் கூடக் கதைகளாக உருப்பெற்றுள்ளன. பொன்னுச்சாமி கதைக் கருக்களைக் கதையாக வளர்ப்பதற்குச் சில உத்திகளை மேற்கொண்டுள்ளார்.

**சான்றெண் விளக்கம்**

1. சி.இ. மறைமலை, இலக்கியக் கொள்கைகள், ப. 51.
2. மீனாட்சி முருகரத்தினம், சிறுகதைக் கலை, ப. 31.
3. தா.ஏ. பியூலா மெர்சி, இருபதில். சிறுகதைகள், ப. 29.
4. எஸ். குணசீலி, அய்க்கண் சிறுகதைகள் ஓர் ஆய்வு, ப. 20.
5. க. வேங்கடராமன், முன்னுரை, பூச்சுமை, ப. 6.
6. க.த. திருநாவுக்கரசு, மு.வ. படைப்பிலக்கியம், பக். 91-92.
7. க. முத்துராசன், இதழியலும் மொழிபெயர்ப்பும், ப. 206.
8. ஈ.கோ. பாஸ்கரதாஸ், மானிட மதிப்புகள், ப. 31.
9. ம. திருமலை, தமிழ்ச்சிறுகதை - நேற்றும் இன்றும், ப. 26.
10. சத்திய சாமுவேல், மனோதத்துவமும் குடும்ப வாழ்க்கையும், ப. 65.

**துணைநின்ற நூல்**


1. மேலாண்மை பொன்னுச்சாமி. : **பூச்சுமை,**
திருவரசு புத்தக நிலையம்,
சென்னை - 600017.
இ.ப. - டிசம்பர், 2004.